தோழர் டிராட்ஸ்கி



-ஆர். பட்டாபிராமன்

சிறு வெளியீடு ஜனவரி 2023

(ராபர்ட் சர்வீஸ் எழுதிய Trotsky A Biography முன்வைத்து)

தோழர் டிராட்ஸ்கி சில இடுகைகள்

செப் 8, 2022 லிருந்து சில நாட்களுக்கு டிராட்ஸ்கியின் சரிதம் குறித்த 17 இடுகைகளை முகநூலில் செய்திருந்தேன். அதை தொகுத்து இங்கு தந்துள்ளேன். எவ்வித காலவாரியான வகையிலும் டிராட்ஸ்கியின் அரசியல் வரலாற்றை முகநூலில் எழுதவில்லை. படிக்கும்போது மனவுணர்வின் காரணமாக சொல்லவேண்டும் என நினைத்தவை மட்டுமே எழுதப்பட்டன. அதில் தொடர்ச்சி இருக்காது என்றாலும், டிராட்ஸ்கி என்ற வரலாற்று மனிதர் குறித்த சித்திரம் ஓரளவிற்கு கிடைக்கலாம்.

டிராட்ஸ்கி வாழ்க்கை சரிதம் Robert Service எழுதியது. 600 பக்க அளவிலானது. 2009 மாக்மில்லன் வெளியீடு. அதில் டிராட்ஸ்கி முதலில் லெனினை தேடிப்போய் சந்தித்த நிகழ்வை ராபர்ட் சர்வீஸ் இவ்வாறு சொல்லியிருப்பார்.

முன்னர் படித்த டிராட்ஸ்கி தன் வரலாற்றிலும் இதைப் படித்த நினைவு இருக்கிறது. ராபர்ட் சர்வீஸ் என்ன சொல்கிறார் எனப்பார்ப்போம்.

சைபீரியா வதைமுகாமிற்கு தன் காதல் மனைவி புரட்சிகர தோழி அலெக்சாந்திரியாவுடன் டிராட்ஸ்கி அனுப்பப்படுவார். அங்குள்ள அலவன்ஸ் போதாமல் சில முதலாளிகளிடம் வேலைப் பார்த்தார். இரு குழந்தைகள் அடுத்தடுத்து பிறந்தன. புரட்சியின் தாகம் துரத்த அவர் சைபீரியாவிலிருந்து துணைவியார் ஒப்புதலுடன் தப்பிக்கிறார். அவர்கள் நிலை டிராட்ஸ்கிக்கு பெரிதாக தோன்றவில்லை. புரட்சிக்கான காரணங்கள் அவருக்கு பெரிதாக தெரிந்தன.

நீண்ட பயணம். களைப்பு. வியன்னா வந்து புகழ்வாய்ந்த தோழர் விக்டர் அட்லரை சந்தித்து உரையாடுகிறார். பிளக்கானவ், ஆக்சல்ராட், லெனின், மார்ட்டோவ் போன்ற புகழ் வாய்ந்தவர்களின் புரட்சிகர பத்திரிகை இஸ்கரா சுவிட்ஜர்லாந்திலிருந்து வருவதை அறிந்து ஜெனிவா செல்கிறார். இரவு நேரம். வந்த குதிரை வண்டிக்கு கொடுக்கக்கூட காசு கிடையாது. ஆக்சல்ராட் இருப்பதை அறிந்து அவரை விளித்து கதவைத் தட்டுகிறார். டிராட்ஸ்கி என்பதை ஏதோ ஒரு வகையில் உறுதிசெய்த பாவல் கதவை திறந்து குதிரை வண்டிக்கான கட்டணத்தை கொடுத்து உள் அழைத்துச் செல்கிறார்.

ஆனால் லெனின் அங்கில்லை. அவர் லண்டனிலிருந்து இஸ்கரா வேலையை பார்த்துக்கொண்டிருக்கிறார் என டிராட்ஸ்கி அறிகிறார். பிளக்கானோவிடம் கேட்டால் கதைக்கு ஆகாது எனத் தெளிந்த டிராட்ஸ்கி, லெனினை பார்க்கப் புறப்படுகிறார். லெனின் வசிப்பிட முகவரியுடன் விடியற்காலை செல்கிறார்.

பிரிட்டிஷ் பழக்கத்தை டிராட்ஸ்கி அறியவில்லை. தூங்கும் நேரத்தில் விருந்தாளியாக போவது சரியல்ல. ஸ்டேஷனில் தங்கி பிறகுதான் செல்வது மரபு. மூன்றுமுறை கதவைத் தட்டினால்தான் சக தோழன் வந்துள்ளான் என லெனின் வீடு திறக்கப்படும். அது சங்கேதக் கோடு.

லெனின் கிருப்ஸ்காயா தம்பதியினர் உறக்கத்திலிருந்து எழவில்லை. தட்டலை அறிந்த கிருப்ஸ்காயா எழுந்து வந்து கதவை திறக்கிறார். தேநீர் உபசரிப்பு நடக்கிறது. லெனின் எழுந்து வந்து ‘ஓ பென் ‘ என்கிற டிராட்ஸ்கி புனைப்பெயரை சொல்லி அழைக்கிறார். லண்டனில் அவர்க்கான guide ஆகவும் இருக்கிறார். லெனின் புனைப்பெயரில் லண்டன் நூலக அட்டையை பெற்றிருந்தார். நூலகத்தின் புத்தகங்களை நுகர டிராட்ஸ்கிக்கும் வாய்ப்பை உருவாக்குகிறார். லெனின் மார்ட்டோவ் டிராட்ஸ்கி என இளம் புரட்சிக்காரர்களின் சந்திப்பு உரையாடல் அங்கு தொடர்ந்தது.

இந்தக் காலம் 1902 அக்டோபர்…

1900 களின் துவக்கத்தில் ரஷ்யாவில் மார்க்சிய புரட்சியாளர் குழுவில் பிளக்கானாவ், லெனின், ஆக்சல்ராட், மார்ட்டோவ், பர்வஸ், டிராட்ஸ்கி போன்றவர்களின் பெயர்கள் பாபுலராக இருந்தது.

1902-03 லேயே லெனின் போல்ஷ்விக்குகள், மார்ட்டோவ் மென்ஷ்விக்குகள் என உட்குழு பிரச்சனைகள் எழுந்தன. பிளக்கானோவ் மிக மூத்தவர். அவர் மென்ஷ்விக் பக்கம் இருந்தார். அங்கும் பெரும்பான்மை- சிறுபான்மை என அறியப்பட்ட இவர்கள் தனித்துக்கூட மாநாடுகளை கூட்டிக்கொண்டனர்.

1902ல் லெனின் டிராட்ஸ்கி நெருக்கம் இருந்தது. டிராட்ஸ்கிக்கு நல்ல ஷூ கூட இல்லையே என அவரை பாரிசிற்கு சந்திக்க வரும்போது லெனின் வாங்கி வந்தார். அளவும் சரியாகவே இருந்தது. லெனின் கணிப்பில் துல்லியமானவர் என பலரும் ஏற்பர்.

டிராட்ஸ்கிக்கு பர்வஸ் மீதான ஈர்ப்பு கூடியது. பர்வஸ் எப்பக்கமும் சாயாமல் தனித்த அறிவுஜீவியாக தனது விளக்கத்தை கொடுத்து வந்தார். இது டிராட்ஸ்கி மனநிலைக்கு ஒத்துப்போனது. இந்தக் காலத்தில் அவர் லெனினுடன் முரண்பட்டார். மென்ஷ்விக்குடன் நின்றார். அதே நேரத்தில் பர்வஸ் நடத்திய ரஷ்ய கெசட், போல்ஷ்விக்குகளின் நோவாய சின், மென்ஷ்விக்குகளின் நாசலோ என மூன்று பத்திரிகைகளிலும் டிராட்ஸ்கியால் தனது கருத்துக்களை எழுத முடிந்தது.

பெட்ரோகிரேடில் சோவியத் என்கிற மக்கள் பிரதிநிதி புரட்சிகர கவுன்சிலுடனும் 1905ல் டிராட்ஸ்கி தொடர்பில் இருந்தார்.. ஜார் ஆட்சி அவ்வாண்டின் எழுச்சியை ஒடுக்கியது. டிராட்ஸ்கி சிறைபிடிக்கப்பட்டு செல் 462ல் வைக்கப்பட்டார். முதல் 15 மாதம் கடந்தது. ஜார் போலீஸ் டிராட்ஸ்கிக்கு முழு உடல் சோதனை செய்யவில்லை.

சைபீரியாவில் மனைவி அலெக்சாந்திரியாவுடன் இரு கை குழந்தைகளையும் விட்டுத்தான் தப்பி வந்தார் டிராட்ஸ்கி. ரஷ்யாவில் நதால்யா பழக்கம் ஏற்பட்டது. அவர்தான் அடிக்கடி சிறைக்கு வந்து தேவையானதை டிராட்ஸ்கிக்கு கொடுத்துப்போனார்.

சட்டப்படியான கணவன் மனைவி இல்லையென்றாலும் ஜார் நிர்வாகம் டிராட்ஸ்கி privacy க்கு அனுமதித்தது. நதால்யாவும் குழந்தையை ஈன்றெடுத்தார்.

டிராட்ஸ்கிக்கு மார்ட்டோவ் மற்றும் மென்ஷ்விக் செயல்பாடுகள் மீது அதிருப்தி ஏற்பட்டது. லெனின் நடவடிக்கைகள் தான் புரட்சியாளர்களுக்கு நம்பிக்கையளிப்பதாக இருக்கிறது என டிராட்ஸ்கி வெளிப்படையாக சொல்ல ஆரம்பித்தார்.

டிராட்ஸ்கி உள்ளிட்டோர் மீதான ராஜத்துரோக வழக்கு 1906 செப்டம்பரில் துவங்கியது. வழக்கம்போல் சைபீரியா நாடு கடத்தல் தண்டனை நவம்பரில் தரப்படுகிறது.

சைபீரியா கொண்டு செல்லப்படும் வழிகளில் ஆங்காங்கே முக்கிய சிறைகளில் தங்கும் ஏற்பாடும் இருந்தது. ஓரிடத்தில் பர்வஸ் தப்பிக்க முயற்சி எடுத்தார். அப்போது டிராட்ஸ்கி உடன்படவில்லை. பர்வஸ் முயற்சி தோல்வியானது.

33 நாட்கள் பயணத்திற்கு பின்னர் தங்க வைக்கப்பட்ட இடத்தில் டாக்டர் ஒருவர் ஜாருக்கு எதிரானவர்களை ஊக்குவிப்பவராக இருந்தார். அவர் உதவியால் டிராட்ஸ்கி உடல்நிலை மோசமானதாக டிராமா நடத்தப்பட்டு அவரை தப்பிக்கவைக்க ஏற்பாடு நடந்தது. இராணுவ அதிகாரி ஒருவரும் இச்சதியில் உடந்தையாக இருந்தார்.

டிராட்ஸ்கி பல நாட்கள் தொடர்ந்து காடு காடு காடு என காட்டு வழிகளிலும், பனிப்படலங்களிலும் செல்லவேண்டும். ரயிண்டீர் ஸ்லெட்ஜ் வண்டியும், காட்டில் வழிகாட்ட ஒருவரும் என்கிற ஏற்பாடு செய்யப்பட்டு டிராட்ஸ்கி ஜார் போலீஸ் இராணுவத்திற்கு தெரியாமல் தப்பிக்கிறார்.

ஏராள அவதிகளை அனுபவித்து வோட்கா, டீ உடன் காலம் கழித்து பெட் ரோகிராடிலிருந்து 700 மைல் தொலைவிலான ஊர் ஒன்றை அடைகிறார். அங்கிருந்து நதால்யா மனைவிக்கு தன்னை வந்து பார்க்கும்படி செய்தி அனுப்புகிறார். கைக்குழந்தையை நண்பர்களிடம் விட்டுவிட்டு நதால்யா 700 மைல் பயணப்பட்டு தன் அன்பான டிராட்ஸ்கியை ஆரத்தழுவுகிறார். இடையில் டிராட்ஸ்கி சொன்ன ஸ்டேஷன் பெயர் மறந்து போகிறது. எப்படியோ பலர் உரையாடலை கவனித்து அந்தப் பெயரை நினைவிற்கு கொண்டுவந்து நதால்யா வந்தடைவதை கேட்கும்போது நமக்கு அவர்களின் விடாமுயற்சி, போராட்ட தாகம் அதன் துரத்தல் புரிகிறது.

◦ சிந்தனை ஒன்று கவ்விப்பிடித்து அதற்காக போராட துணிபவர்களின் வாழ்க்கை சாகசங்களில் எதற்கும் குறைவில்லாத சாகசங்களுடன் தான் டிராட்ஸ்கி வாழ்க்கையும் இருப்பதைக் காணமுடிகிறது.

3

1910ல் டிராட்ஸ்கி தனது 30 ஆம் வயதை கடந்து கொண்டிருக்கிறார். பத்திரிகை பிராவ்தாவை ஆரம்பித்து அதற்கு நிதியை manage செய்வதில் பாடுதான்.

மாக்சிம் கார்க்கி இடது பத்திரிகைகளுக்கெல்லாம் தன்னால் ஆன உதவியை செய்துகொண்டிருந்தார். டிராட்ஸ்கியும் கார்க்கியை நிதிக்காக அணுகி உதவி பெறுகிறார். 1910ல் மென்ஷ்விக் போல்ஷ்விக் சேர்ந்து கூடினர்.

டிராட்ஸ்கிக்கு இரு பக்கத்திலும் செல்வாக்கில்லை. அவர் எழுதுகிறவர். கட்சி அமைப்பில் அவருக்கென குழுவோ செல்வோக்கோ இருக்கவில்லை. ஆனாலும் அவரின் எழுத்துக்களை மென்ஷ்விக், போல்ஷ்விக் உட்பட பலரும் பிரசுரித்து வந்தனர். இந்த அடிப்படையில் பிராவ்தாவிற்கு உதவி செய்யவும் ஏற்றுக்கொண்டனர்.

உதவி சும்மா வருமா நிபந்தனையுடன் வந்தது. லெனினுக்கு நெருக்கமாக இருந்த காம்னேவ்வை எடிட்டோரியல் குழுவில் சேர்க்கப்படவேண்டும் என்ற நிபந்தனை. காம்னேவ் டிராட்ஸ்கி சகோதரியின் கணவர்தான். குடும்பத்திலிருந்த வேறுபாடுகள் பிராவ்தா அலுவலகம்வரை நீண்டது.

டிராட்ஸ்கி எதை எழுதினாலும் அதை கண்காணித்து விமர்சித்து வந்தார் காம்னேவ். நிதியுடன் பிரச்னையையும் இந்த தோழர்கள் சேர்த்து தந்த உணர்வில் டிராட்ஸ்கி செயல்படுவது கடினமாக்கப்பட்டது.

டிராட்ஸ்கி இந்த நேரத்தில் அவர் முக்கியம் எனக் கருதிய முழக்கம் ஒன்றை தந்தார்.

One party one working class one revolution - It is madness for the factions to conspire against each other.

சொல்தல் யாருக்கும் எளிதாம் என்பதாகவே டிராட்ஸ்கி வாழ்வும் காட்டியது. டிராட்ஸ்கி வாழ்வு மட்டுமல்ல, அமைப்பில் வேலை செய்த எவருக்கும் - அது எந்த அமைப்பாக இருந்தாலும் இப்படி ஏதோவொரு குழு சண்டையில் ஏதோவொரு காலத்திலாவது சிக்காமல் அமைப்பு வாழ்க்கை போயிருக்காது. அப்படி தப்பித்தவர் எவரேனும் இருந்தால் அவர் பாக்கியவானே

கம்யூனிஸ்ட் கட்சிகள் பொதுவாக லெனின் வகைப்பட்ட புதிய கட்சி என அழைக்கப்படும். 1917 சோவியத் புரட்சிக்கு பின்னர் அமைந்த லெனின் தலைமையிலான அரசாங்கம் Sovnarkom என்ற பெயரில் அழைக்கப்படும். டிராட்ஸ்கியை தலைமை பொறுப்பை எடுக்கச்சொன்னபோது யூதர் ஒருவர் எடுப்பது உகந்ததல்ல, லெனின் எடுக்கவேண்டும் என்று அனைவரும் வற்புறுத்தினர். டிராட்ஸ்கிதான் அந்த கருத்தை முன்வைத்தவர்.

புதிதாக அமைந்த அரசாங்கத்திற்கு பழைய ஜார் கால அதிகாரிகள் பலரும் தேவைப்பட்டனர். டிராட்ஸ்கிக்கு மிலிட்டரி கவுன்சில் அமைச்சர் people's commissariat for Military Affairs கொடுக்கப்பட்டது. உள்துறையையும் பார் என்றார் லெனின். டிராட்ஸ்கி தயங்கினார். வெளியுறவுத்துறை எடுத்துக்கொண்டார். மாஸ்கோவில் தங்குவது என்பது இதனால் பெரும்பாலும் இல்லாமல் போனது.

ஜெர்மனியுடன் போர் நிறுத்த உடன்பாடு, அட்மிரல் கோல்சாக் வெள்ளை படையெடுப்பு போன்றவற்றை அவர் சமாளிக்க வேண்டியிருந்தது. கிழக்கு முனை மிலிட்டரி பொறுப்பு கூடுதலாக ஸ்டாலினுக்கு வழங்கப்பட்டது. அவர் டிராட்ஸ்கி உத்தரவுகளை ஏற்காமல் தல நிலையை சமாளிக்க தனி அதிகாரம் கோரினார். 1918ல் இந்த மோதல் அதிகமாகி 1919-20 ல் பதட்டம் தணிந்த நிலை உருவானது.

ஜார் இம்பீரியல் இராணுவ அதிகாரிகளை வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை டிராட்ஸ்கி, ஸ்டாலின் இருவரும் நடைமுறை அனுபவத்திலிருந்து புரிந்துகொண்டனர். ஆனால் எவ்வளவு, எந்த தூரம் கட்டுப்பாடுகளை விதிப்பது என்பதில் வேறுபட்டனர். டிராட்ஸ்கி முழு கட்டுப்பாட்டை control விரும்பினார். லெனினிடம் ஜார் அதிகாரிகள் தேவை என எடுத்துச் சொல்வதில் டிராட்ஸ்கிதான் தேவைப்பட்டார். லெனின் அப்போதுதான் convince ஆவார் என்ற நிலையிருந்தது.

1918 ஜூலைவரை கூட ஒரே கட்சி கட்டுப்பாட்டில்தான் அரசாங்கம் என்பது பெயரளவில் இருந்தது. ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி என்கிற பெயர் மாற்றம் பின்னர் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி என்ற மாற்றம் வந்தன. கட்சியில் மத்திய அதிகாரங்களை வலுப்படுத்தி அரசியல் முடிவுகளை கறாராக எடுக்க அமுல்படுத்த பொலிட் ப்யோரோ politburo மற்றும் அமைப்பு விஷயங்களை நேர்படுத்த Orgburo உருவாக்கப்பட்டன. இன்றும் உலகில் உள்ள பல நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளில் பொலிட்ப்யூரோ இருப்பதைக்

காண்கிறோம். ஆர்க்ப்யூரோ இந்தியாவில் control commission என்ற வடிவத்தில் இயங்குவதைக் காணலாம்.

லெனினுக்கு அடுத்த சக்தி படைத்தவர், உலகை சுற்றக்கூடியவர், மயக்கும் பேச்சாளர் என்ற வகையில் டிராட்ஸ்கி பெரும் அதிகாரம் கொண்டவராக மாறினார். வீரர்கள் உணவு, உடை , பூட்ஸ், ஆயுதங்கள் ஆகியவற்றின் நேர்த்தியை அவரே பார்வையிட்டு சரி செய்வார். எவரும் அவர் முன்னால் நேர்த்தியாக நிற்கவேண்டும் என்ற கட்டளை இருந்தது. ஒழுங்கு கடுமையாக்கப்பட்டிருந்தது.

அவர் **தனி trainல்** கிளம்புகிறார் என்றால் அவருக்கான 300 **Staff** கிளம்பவேண்டும். தனி உதவியாளர்கள், பாதுகாவலர், ஆர்மி சார்ந்தவர், சமையல்காரர்கள், பிரஸ்காரர்கள், பிரிண்டிங் மெஷின்ஸ், டைப்பிஸ்ட்கள், குறிப்பு எடுப்பவர்கள் என பலவகை உதவியாளர்கள் உடன் செல்வர். போகும் வழி நெடுக மக்களை பார்க்கும் இடங்களில் எல்லாம் அரசாங்க செயல்பாடுகள் குறித்த துண்டு பிரசுரங்கள் வீசப்படும். கூட்டம் இருந்தால் டிராட்ஸ்கி 10 நிமிட சுருக்க சொற்பொழிவாற்றுவார்.

இரயிலில் டிராட்ஸ்கி எழுத தனி டெஸ்க் ஏற்பாடுகள், அமர்ந்து விவாதிக்க சேர்கள், சிறிய ஓய்விற்கு சாய்நாற்காலி, வசதியான படுக்கைகள் வைக்கப்பட்டிருக்கும்…

புரட்சிக்குப் பின்னர் இப்படி உச்சத்தில் லெனினுக்கு அடுத்த இடம் எனத்துவங்கிய அவர் வாழ்வு பெரும் சோக வரலாறானது என்பதை உலகம் கண்டது. நேரு ஒருமுறை எழுதினார், எனக்கு **intellectual** ஆக லெனினைவிட டிராட்ஸ்கியிடம்தான் நாட்டம் செல்கிறது என..

வாழ்வின் இழுப்புகளில் யார் எங்கு சிக்குவோம் என முன்கூட்டியே எப்படி சொல்லமுடியும்.

5

அக்டோபர் புரட்சியின் இரண்டு ஆண்டுகள் காலமான அக் 1919ல் புரட்சிக்கு அஸ்திவாரமிட்ட பெட்ரோகிராட் கைவிட்டுப் போய்விடுமோ என்ற நிலை ஏற்பட்டது.

பல முனை தாக்குதலை அட்மிரல் கோல்சாக் வெள்ளைப்படை கொடுத்தது. பிரிட்டனில் கூட்டணி ஆட்சியை உலகப்போர் முடிவில் மேற்கொண்ட டேவிட் லாயிட் ஜார்ஜ், நாம் உலகிற்கு மீண்டும் சொல்லவேண்டும் 'அரசாங்க முதலாளித்துவத்தைவிட மார்க்கெட் முதலாளித்துவம்தான் சிறந்தது என்பதை ' என நாடாளுமன்றத்தில் முழங்கினார். இதற்காகத்தான் பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளை வெள்ளைப்படைக்கு அனுப்பியுள்ளோம் என்றார்.

பிரிட்டிஷ், பிரான்ஸ் ஆதரவுடன் யுடெனிக் எனும் வெள்ளைப்படை அதிகாரி தலைமையில் அவர்கள் பெட் ரோகிராடிற்கு 8 மைல் தொலைவிற்கு உள் நுழைந்திருந்தனர். ஜீனோவீவ் எனும் பொலிட்ப்யூரோ தோழர் அலறினார். அந்நகரை விட்டு வெளியேறிவிட்டால்தான் அரசை புரட்சியை காக்கமுடியும் என்றார். லெனினும் கவலையடைந்தார். பொலிட்ப்யூரோ கூடி முடிவெடுக்கலாம் என்ற நிலைக்கு போனார்.

தென்முனை காக்கும் முனைப்பில் இருந்த டிராட்ஸ்கிக்கு தகவல் செல்கிறது. பெட் ரோகிராட் பற்றி 1905 முதல் நன்கறிந்தவர் டிராட்ஸ்கி. அந்நகரை கைவிடுவது புரட்சிக்கு நாம் செய்யும் துரோகம் என்றார் டிராட்ஸ்கி. பொலிட்ப்யுரோ இரு பிரிவாக நின்றது. காலி செய்து காத்துக்கொள்வதா- எதிர் நின்று மீட்டு புரட்சியை உறுதிசெய்வதா என வேறுபாடுகள் நிலவின.

காம்னேவ் (டிராட்ஸ்கியின் சகோதரியின் கணவர்), ஸ்டாலினை தன் கருத்திற்கு உடன்படவைத்தார் டிராட்ஸ்கி. பெட்ரோகிராட் மீட்பிற்கு ரஷ்யாவை இராணுவமயமாக்குவோம் என முழங்கினார் டிராட்ஸ்கி. லெனின் இசைவை பெற்றார். புகழ்வாய்ந்த கவித்துவ தெறிப்புகளை தரவல்ல டெம்யன் பெட்னியை போர்முனைக்கு அழைத்துச்சென்று வீரர்களை உற்சாகப்படுத்தினார். கவலையடைந்த திருமதி பெட்னியிடம் உன் கணவர் என் உயிர் இருக்கும்வரை பத்திரமாக இருப்பார். வீடு திரும்புவார் என்றார்.

ஸ்டாலின் , காம்னேவ் போன்ற உயர்மட்ட தலைவர்கள் தங்கள் திறமையெல்லாம் காட்டிட மிலிட்டரி தலைவர் என்ற வகையில் எந்த தடையையும் செய்யாமல் டிராட்ஸ்கி

நடந்துகொண்டார். மத்தியதர வர்க்கம் ஸ்டாலின் பேச்சால் ஆயுதம் எடுத்து பெட்ரோகிராட் காக்க முன்வந்தது. ரெட் ஆர்மி பெருமிதத்துடன் போரில் ஈடுபட இந்த தலைவர்கள் தாங்களே களத்தில் வந்து நின்றது காரணமானது. அவர்கள் தங்களது சமயோஜித திறமையால் புகழ் வாய்ந்த அந்நகரை மீட்டு அக்டோபர் புரட்சி வீழாமல் காத்தனர்.

லெனினும் பொலிட்ப்யூரோவும் இவர்களைப் பாராட்டினர். அடையாளமாக டிராட்ஸ்கிக்கு order of Red Banner என்ற கெளரவம் அளிக்கப்பட்டது.

எவரோ ஒருவரின் நம்பிக்கை தந்த உற்சாகம் மற்ற எல்லோரிடமும் பற்றி அதனை செயலூக்கத்துடன் வினையாக செய்யும்போது அவர்களின் கனவு மெய்யாகிறது என்ற பாடத்தை சோவியத்வரலாற்றில் இந்நிகழ்வு தந்ததைக் காண்கிறோம்.

இப்படி சொல்லப்படாத கதைகளின் வழியே மானுடம் ஏராள இரகசிய கிட்டங்கிகளை புதைத்துக்கொண்டே நகர்கிறது. என்றோ ஒருநாள் அகழ்வாராய்ச்சி எனும் பெயரில் எவரோ மேல் கிளம்பி வருவர்.

தலைவர்களுக்கு கொஞ்சமாவது பீடம் ஏற்றாத நாடோ சமூகமோ இருப்பதில்லை. அதிகாரத்திற்கு வரும் தலைவரை சுற்றி நின்று அவர் சொல்வதையெல்லாம் எதிர்ப்பின்றி ஆமோதித்து ஆராதனை காட்டும் விசுவாசிகள் பெருக்கத்துடன் **personality cult** நேர்விகிதத்தில் பொதுவாக அமையும்.

சோவியத் புரட்சிக்குப் பின்னரும் இந்த 'கல்ட்' உருவாக்கம் லெனினை சுற்றி ஓரளவு, லெனின் மறைவிற்குப்பின்னர் ஸ்டாலினைச் சுற்றி பேரளவிலும் நடைபெறலானது.

புரட்சியின் காலத்தில் போல்ஷ்விக்குகள் மத்தியில் தலைமை பொறுப்பு தோழர்கள் தங்கள் புகைப்படங்களையோ, வாழ்க்கை குறிப்புகளையோ வெளியிடாமல் இருப்பதில் கவனமாக இருந்தனர். லெனின், டிராட்ஸ்கி என இருவரும் சம அளவிலான புகழை உலகத் தோழர்களுடன் பெற்றுக்கொண்டிருந்தனர். லெனினுக்கு மெதுவாக உள்நாட்டில் புகழ் கூடத்துவங்கியது. அதுவும் குறிப்பாக 1918ல் அவர் மீதான கொலை தாக்குதல் முயற்சி நடந்தவுடன் அவரின் முக்கியத்துவம் அதிகம் உணரப்பட்டது.

வெளிநாட்டு பத்திரிகையாளர்களை, குறிப்பாக அமெரிக்கர்களை சற்று சோசலிச நம்பிக்கையுள்ளவர்களையாவது நாம் அனுமதிக்கவேண்டும். அவர்கள் குறைகளை வேண்டுமானாலும் சுட்டிக்காட்டட்டும். நாம் நமது சோசலிச பிராஜக்ட் பற்றி எடுத்துச்சொல்லி புரியவைக்க முடியும் என தொடர்ந்து வாதாடியவர் டிராட்ஸ்கி. எல்லோரும் ஏற்ற நிலையில் பத்திரிகையாளர்கள் அறிஞர்கள் லூசி பிரையண்ட், மாக்ஸ் ஈஸ்ட்மேன், லிங்கன் எயிர், ஆந்த்ரே மொரிசெத், வெல்ஸ், ரஸ்ஸல் போன்ற புகழ் வாய்ந்தவர்கள் வந்தனர்.

பொதுவாக லெனின், டிராட்ஸ்கியை பேட்டி எடுக்க அவர்கள் விழைந்தாலும் லெனின் பேட்டிதான் முக்கியத்துவமானது என்ற உணர்வு இருந்தது. அது சரியானதும் கூட. டிராட்ஸ்கியும் இராணுவ வேலை என பல நேரங்களில் தப்பித்தும் சென்றார்.

ரஸ்ஸலாவது சில நிமிடங்கள் அவருடன் உரையாடியிருப்பார். வெல்ஸ்க்கு அதுவும் கிட்டவில்லை.

நாளடைவில் லெனின் போட்டோக்கள் பிரபலமாயின. பொதுவாக கூட்டமுடிவில் போட்டோ செஷன் என்ற ஏற்பாடு வந்தது. டிராட்ஸ்கி உடன் கீழே போய்விடுவார்.

ஒருமுறை அவரை வற்புறுத்தி வரவைத்தனர். கூட இருந்த ஒருவர் the dictatorship of photographer என்று comment அடித்து டிராட்ஸ்கியை புன்முறுவல் செய்ய வைத்தார்.

லெனின் வரலாறு ஒன்றை ஜீனோவீவ் எழுதினார். சிலர் டிராட்ஸ்கியை அணுகி வாழ்க்கையைப்பற்றி கேட்டனர். அவர் பெரும்பாலும் வேலை கிடக்கிறது எனச் சொல்லி நகர்ந்துவிடுவாராம்.

எதைச் செய்தாலும் அது சோசலிச கட்டமைக்க செய்வதாக தலைவர்கள் மெய்யாலுமே நம்பினர். மார்க்ஸ் எங்கெல்ஸ்க்குப் பின் மார்க்சிய போப் என கருதப்பட்டவர் கார்ல் காட்ஸ்கி. இவர் குறித்து தான் லெனின் ஓடுகாலி காட்ஸ்கி என்கிற அரசியல் ஆக்கத்தைக்கொணர்ந்தார்.

காட்ஸ்கி ரஷ்யாவை இப்படி ராணுவமயமாக்குவது குறித்து விமர்சனத்தை வைத்தார். அதற்கு டிராட்ஸ்கி நாங்கள் கட்டுவது **Socialist Militarism and we shall not renounce it** என்றார். இப்படி அவர்கள் சோசலிச எதார்த்தவாதம், சோசலிச இராணுவமயம் என்றெல்லாம் விளக்கங்களை கொடுத்துக்கொண்டிருந்ததை வரலாற்றில் காண்கிறோம்.

தொழிற்சங்கம் என்பது புரட்சிகர அரசாங்கம் வந்தபின் **deadwood** என்ற கருத்து டிராட்ஸ்கியிடம் இருந்தது. தொழிலாளர்களை **militarise** செய்வது தொழிற்சங்கங்களை அரசாங்க பிரசங்கியாக்குவது அவசியம்- இல்லையெனில் தேவையில்லா நேர விரயம் ஏற்படும் என்றார். லெனின் இவற்றை **crude** ஆக செய்வது கேடுவிளைவிக்கும் என்றார்.

அதேபோல் லெனின் முன்வைத்த **NEP** புதிய பொருளாதார கதவை அகல திறக்க டிராட்ஸ்கி விழைந்தார். அந்நிய முதலீடுகள் வராமல், ஜெர்மன் முதலாளித்துவ கம்பெனிகளை அனுமதிக்காமல் பொருளாதார முன்னேற்றம் இல்லை என்றார். இதிலும் கட்சிக்குள் இருந்த பல்வேறு கருத்தோட்டங்களை கணக்கில்கொண்டு லெனின் சற்று நிதானமாக செயல்பட விரும்பினார். கருத்துவேறுபாடுகள் முட்டின. இருவருமே உடல்நிலை பாதித்த நிலையில் பணியாற்றிக்கொண்டிருந்தனர்.

கட்சி வேலைகளை சற்று குறைத்துக்கொள்ள லெனின் விழைந்தார். காம்னேவ், மாலட்டாவ் முன்னெடுப்புகள் லெனினிடம் எடுபட்டு ஸ்டாலின் பொதுச்செயலர் ஆனார். அரசாங்கத்திலும் டிராட்ஸ்கியையோ ஜீனவீவ் காம்னேவ் போன்றவர்களையோ தனக்கு அடுத்த நிலை ஆக்காமல் ரைகோவை ஆக்கினார் லெனின்.

அதேநேரத்தில் **Russian Orthodox Church** யை சற்று முரட்டுத்தனமாக எதிர்கொள்ள அதாவது தீவிரமாக ஒடுக்க லெனின் முயற்சி எடுத்தபோது, மக்களின் நீண்டகால பழக்கம் ஒன்றை அப்படி கையாண்டு வெற்றிபெற இயலாது என்பதை டிராட்ஸ்கி லெனினிடம் சொல்லி

ஏற்கவைத்தார். சர்ச்சுகளில் பிளவு உருவாக்கி, சோவியத் சோசலிச ஆதரவு **Renovationists** எனும் பிரிவிற்கு முன்னுரிமை கொடுத்து அவர்கள் கோரிய வழிபாட்டு உரிமையை லெனினை ஏற்கச் செய்தார்.

டிராட்ஸ்கியின் வெளிப்படையான கருத்துக்களால் பல அரசியல் தோழர்களை அவர் இழந்தார். பொலிட்ப்யூரோவில் தனிமைப்பட்டார். கட்சியின் முக்கிய இடங்களுக்கு அவரின் ஆதரவாளர்கள் தேர்ந்தெடுக்கப்படாத நிலை உருவானது..

7

புதியன புகுதலும் பழையன கழிதலும் இயற்கையின் தேர்வு மட்டுமல்ல, அமைப்புகளிலும் நடைபெற்றுவரும் தேர்வுதான். அங்கு சிலநேரம் உக்கிரமான போராட்டங்கள் வழி இவை நடந்தேறும்.

லெனின் சுகவீனத்துடன் போராடிக்கொண்டிருக்கிறார். மீண்டு வருவாரா என்பதை எவரும் சொல்லமுடியாத நிலை நீடிக்கிறது. பொதுச்செயலரான ஸ்டாலின் தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்டு வருகிறார். இவ்வளவிற்கும் அவர் அப்போது டிராட்ஸ்கி அளவிற்கு புகழ்பெற்ற பேச்சாளரோ, கோட்பாட்டாளரோ இல்லை. இருந்த இடத்தில் அமர்ந்து தனக்கான தோழர்களுடன் காரியமாற்ற தேர்ந்தவரானார்.

13வது சோவியத் கட்சி காங்கிரஸ் லெனின் இல்லாமல் 1924ல் கூடப்போகிறது. லெனின் இருக்கும்போது கூட்டங்களில் அவர் கருத்தை ஏற்கமுடியாது எனப் பேசியவர்கள் உட்பட எவரும் இனி லெனினிஸ்ட் எனச் சொல்லாமல் இருக்கமுடியாது என்ற சூழலை லெனின் மறைவு ஏற்படுத்திவிட்டது. அதிகாரத்தில் இருந்த லெனினைவிட மறைந்த லெனின் பெரிதும் போற்றப்படலானார். அவரது எழுத்துக்கள் பேரளவு புனிதமாக்கப்பட்டன.

டிராட்ஸ்கி தானும் லெனினிஸ்ட் தான் என சொல்லவேண்டிய சூழலை உணர்ந்தார். ஆனாலும் மெதுவாக அவரது முக்கியத்துவம், அவரைச் சார்ந்தவர்களின் முக்கியத்துவம் குறையலானது. லெனின், டிராட்ஸ்கி, ஜினோவீவ், காம்னேவ், ஸ்டாலின், புகாரின் என்ற நிலை மாற்றம் பெற்று ஸ்டாலின், புகாரின் என்ன முடிவெடுக்கிறார்களோ அதுவே நடைமுறையாகும் என்ற நிலை 13, 14வது காங்கிரசில் உருவானது.

ஸ்டாலின் மிக அற்புதமாக தனக்கு மெஜாரிட்டி வரும் வகையில் பொலிட்ப்யூரோவில் மத்திய கமிட்டியில் காய்களை நகர்த்தமுடிந்தது. எவர் ஸ்டாலினுக்கு எதிரானவர் என எவரையும் நம்பி ஏதும் பேசிவிடமுடியாது என்ற நிலை உருவானது.

இராணுவ அமைச்சரக பொறுப்பிலிருந்து தானே முன்வந்து டிராட்ஸ்கி விலகவேண்டிய நிர்ப்பந்தங்கள் உருவாயின. அவர் அப்பொறுப்பில் இருக்கும்போதே அவரது போன் ஒட்டுக்கேட்புகள் நடந்த புகாரை எழுப்பினார். வேறு ஒரு போனை கேட்டுப் பெற்றார். அமெரிக்க நண்பர்கள் ஈஸ்ட்மேன் உள்ளிட்டவர்களுடன் அவரால் அனுப்பப்படும், அவருக்கு வரும் மெயில்கள் தணிக்கைக்கு உள்ளானதுடன் டெலிவரி ஆகாமல் நிறுத்தப்பட்டன.

லெனின் இருக்கும்போதே லெனின் துணைவியார் கிருப்ஸ்காயாவுடன் நடந்த தொலைபேசி உரையாடலில் மரியாதை குறைவாக ஸ்டாலின் நடந்துகொண்டார் என்பதும், கட்சி காங்கிரசில் ஸ்டாலின் நீக்கப்படவேண்டும், புதிய தோழர்கள் கட்சி பொறுப்புகளுக்கு முழுமையாக வரவேண்டும் என்பதை லெனின் தனது டெஸ்டமெண்டில் சுட்டிக்காட்டியிருந்தார்.

டிராட்ஸ்கி, ஜீனோவீவ், காம்னேவ் மூவரும் ஒருவருக்கொருவர் சந்தேகமில்லாமல் அவரவர் திறமையை மதித்து காய்களை இணைந்து நகர்த்தியிருந்தால் ஸ்டாலினிடம் கட்சி சிக்கியிருக்காது என்ற பேச்சு **gossip** ஆக இருந்தது. ஆனால் புகாரினை வைத்துக்கொண்டு ஸ்டாலின் அற்புதமாக கட்சி மெஷினரியை தன்னிடத்தில் முழுமையாக்கிக் கொண்டார். பின்னர் புகாரினுக்கு நேர்ந்ததையும் காலம் பார்த்தது.

லெனின் மறைவிற்குப் பின்னர் கிருப்ஸ்காயாவும் டிராட்ஸ்கியிடம் லெனின் எண்ணங்களை விவரித்தார். ஸ்டாலினுக்கு அடிப்படை ஆரம்ப மனித நாகரீகம் கூட தெரியவில்லை **he lacked even the most elementary human decency** என்ற தாக்கீதை லெனின் செய்ததாகவும் தெரிவித்தார்.

டிராட்ஸ்கி பொலிட்ப்யோரோவிலிருந்து 1926ல் வெளியேற்றப்பட்டார். ஈஸ்ட்மேன் மாஸ்கோ வந்து டிராட்ஸ்கியின் வாழ்க்கை குறித்தும், லெனின் குறித்தும் பல்வேறு குறிப்புகளை டிராட்ஸ்கியிடம் பெற்றுச் சென்றார். லெனின் டெஸ்டமெண்ட் கட்சியின் நலன் கருதி வெளியிடப்படாமல் இருந்தது. முக்கிய தோழர்கள் மட்டும் அறிந்திருந்தனர். அதன் நகல் எவருக்கும் கொடுக்கப்படாமல் இருந்தது.

ஈஸ்ட்மேன் அமெரிக்காவில் அதன் சாரத்தை வெளியிட்டுவிட்டார். அவருக்கு டிராட்ஸ்கி வழியாகத்தான் போய் இருக்கமுடியும் என்ற பேச்சு எழுந்தது. கட்சி கமிட்டிகளில் அதன் மீது கண்டனம் எழுந்தபோது அப்படியொரு டெஸ்டமெண்டை லெனின் எழுதவேயில்லை, அது அமெரிக்காவில் சொல்லப்படும் கட்டுக்கதை என டிராட்ஸ்கி உட்பட அனைவரும் பேச வேண்டியதானது.

மாக்ஸ் ஈஸ்ட்மென் சங்கடத்திற்குள்ளானார். பாரிசில் இருந்த சோவியத் அம்பாசிடர் ரகோவ்ஸ்கியிடம் லெனின் டெஸ்டமெண்டை காட்டினார். படித்த ரகோவ்ஸ்கி வெளியிட்டு உன்னை நிரூபித்துக்கொள் என்றார். டிராட்ஸ்கி தனி உரையாடலில் அந்த அமெரிக்க தோழன் உண்மையான புரட்சிகரவாதி என்றார். ...

டிராட்ஸ்கி மீது பொதுவாக நண்பர்களை வைத்துக்கொள்ளத்தெரியாது..தன்னை தலைமையாக ஏற்று வந்த factionயை தொடர்ந்து கட்டியாளத்தெரியவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் உண்டு.

1902ல் லெனினை சந்தித்து அளவளாவிருந்தாலும் 1903-1917 காலங்களில் பெரும்பாலும் இரு பெரும் குழுக்களில் சிக்காமல் தனித்து பேசியும் எழுதியும் வந்தவர் டிராட்ஸ்கி. லெனினை பெரிதாக கொண்டாடவேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுக்காதவராக அவர் பயணித்தார்.

புரட்சி காலத்தில் லெனின் டிராட்ஸ்கி என இருவரும் ஒருவருக்கொருவர் தேவைப்பட்டனர். இணக்கமாகவும் சிறு வேறுபாடுகளுடன் நகர்ந்தனர். லெனின் ஆட்சி தலைமையில் அடுத்த நிலையில் டிராட்ஸ்கி என்ற நிலை இருந்தது. ஸ்டாலின் பொதுச்செயலர் ஆக்கப்பட்ட நிலையில் , லெனின் தனது இறுதி நாட்களில் ஸ்டாலினைப் பொறுப்பிலிருந்து இறக்கவேண்டும் என்ற செய்தியை அனுப்பினார். அது நிறைவேறவில்லை. லெனின் மறைவிற்குப்பின்னர் தன்னை லெனினிஸ்ட் ஆக டிராட்ஸ்கி காட்ட முயற்சித்தது ஏற்கப்படாமல் போனது. இதில் ஸ்டாலின் பெரும் வெற்றியைப் பெற்றார்.

டிராட்ஸ்கியிடம் ஏதோ ஒருவகையில் நெருக்கமாக இருந்தவர்கள் என அறியப்பட்டவர்கள் அனைவரும் ஸ்டாலின் ஆட்சியில் உழைப்பு முகாமில் சித்திரவதை மரணத்தை தழுவ நேர்ந்தது. ரடேக், பிரோபிரஜென்ஸ்கி, ரகோவ்ஸ்கி, செரெப்ரைகாவ், பைடகாவ், ஸ்மைல்கா என பல முக்கிய தோழர்கள் துப்பாக்கி குண்டுகளால் தொலைந்து போயினர். டிராட்ஸ்கியால் எவரையும் காப்பாற்ற முடியவில்லை.

டிராட்ஸ்கி சிகரெட் புகைத்து தள்ளுவார். லெனின் புகை பிடிக்கமாட்டார். டிராட்ஸ்கியும் 1917க்குப் பின்னர் புகையை விட்டார். லெனின் முக்கிய பார்ட்டிகளில் மரியாதை நிமித்தம் கொஞ்சம் பீர் எடுத்துக்கொண்டு போய்விடுவார்.

நண்பர்கள் வற்புறுத்தலால் சில நேரம் டிராட்ஸ்கி இருப்பார். பலதோழர்கள் பார்ட்டி என்றால் எப்படி சந்தோஷிக்கவேண்டுமோ அப்படி நடந்துகொள்வர். புகை மண்டலம், உயர பாட்டில்கள் இடையில் கொச்சைப் பேச்சுக்கள் இருக்கும். டிராட்ஸ்கி ஆபாச பேச்சுக்கள் என்றால் முகம் சுளிப்பார். போல்ஷ்விக்குகள் 'சுப்பீரியர்' என்றால் அந்த conscious இருக்கவேண்டும் என அத்தோழர்களை கண்டிப்பார். நதால்யாவுடன் பார்ட்டிக்கு

செல்லும்போது இந்த ஆபாசங்களையெல்லாம் தாங்கமுடியவில்லை நேர விரயம் என்பார் டிராட்ஸ்கி.

டிராட்ஸ்கி சகோதரி ஓல்காவும் அவரது கணவரும் முக்கிய தோழருமான காம்னேவும் ஒரு நிகழ்விற்கு அழைத்திருந்தனர். ஓல்கா அந்நிகழ்வை பூர்ஷ்வாத்தனமாக நடத்துகிறாள் என டிராட்ஸ்கி கோபித்துக்கொண்டாராம்.

லெனின் பார்ட்டி என்றால் சிறிது நேரத்திலேயே கிளம்பி diplomatic ஆக நடந்துகொள்வது போல இல்லாமல் நேரிடையாக விமர்சித்து அத்தோழர்களிடம் டிராட்ஸ்கி உறவை கெடுத்துக்கொள்வார். தேவைப்படுகிறார்கள் என்றால் அவர்களை சற்று நிதானமாக நடத்த அறிந்தவராக லெனின் இருந்தார். ஆனால் டிராட்ஸ்கி **Self righteous** ஆக எப்போதும் இருப்பார். தன் பேசும் திறன், எழுத்தாற்றல், வாதத்திறன் ஆகியவற்றையே அவர் தனது பலமாக நினைத்தார்.

ஒருமுறை 1926ல் அவருக்கு நெருக்கமாக இருந்த ஆந்த்ரே அந்த்ரீவ், பின்னால் ஸ்டாலின் புகாரினுக்கு நெருக்கமானவர், டிராட்ஸ்கியிடம் இவ்வாறு கூறினார். டிராட்ஸ்கி நீங்கள் ஏராளம் எழுதுகிறீர்கள் ஆனால் எவன் அவற்றை படிக்கிறான்.. அந்த்ரீ விடம் சிறு புன்னகை உதிர்த்துவிட்டு டிராட்ஸ்கி பதில் கூறாமல் இருந்து விட்டார்.

தோழர் **Max Eastman** பதிவு ஒன்றில் இப்படி டிராட்ஸ்கி பற்றிச் சொல்கிறார்.

He never boasts, he never speaks of himself or his achievements, he never monopolises his conversations. He gives his attention freely and wholly to anything that comes up..if I pay him a compliment, he says some little thing, ‘ I am glad’ , and then passes on another subject..

அடுத்தவரின் அறியாமையை முட்டாள்தனத்தை சகிக்காதவர் என்ற பெயரை மட்டுமல்லாமல் மிகவும் arrogant என்ற பெயரும் அவருக்கு கிடைத்தது. இப்படி தம் மீது ஒட்டப்படும் லேபிள்களை துடைத்தெறியவேண்டும் என்ற எந்த முயற்சியும் அவரிடம் இல்லை என அவர் குறித்து அறிந்தவர்கள் சொல்லக்கேட்கிறோம்.

இந்திய சிறையில் லெனினை படித்த அளவு டிராட்ஸ்கியையும் பகத்சிங் படித்ததைப் பார்க்கிறோம். ஏராள இளைஞர்களை 1920- 1930 களில் ஈர்த்த அந்த டிராட்ஸ்கி வரலாற்றில் துயர நாயகன் ஆனார்..

11

வரலாற்றில் நிலைபெற்றுள்ள பல தலைவர்களின் வாழ்க்கை குறிப்புகள் மானுஷ அமானுஷ என்ற இரு பக்கங்களையும் கொண்டதாகவே என்னால் உணரமுடிந்துள்ளது.

எவரையும் கடவுள் நிலைக்கு உயர்த்தும் **absolute hagiography** என்ற வகையில் நான் புரிந்துகொள்வதில்லை. அதேபோல் குறைகளை மட்டுமே **issuing always charge sheet with all bias** என்பதாகவும் நான் அமைத்துக்கொள்வதில்லை. ஒருவரிடம் கொண்டாடப்படவேண்டிய தவிர்க்கப்படவேண்டிய என்ற இரட்டை குணங்களையும் கொண்டுதான் மனித வாழ்க்கை ஒவ்வொருவர் வழியாகவும் சமூகத்தில் நகர்கிறது.அப்படித்தான் டிராட்ஸ்கியையும் பார்க்கவேண்டியுள்ளது.

டிராட்ஸ்கி சில துன்ப சூழலிலும் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்தியதை பார்க்கமுடிகிறது. பொதுவாக அவர் **very serious disciplined man** ஆகப் பார்க்கப்பட்டார். அவரின் அலெக்சாந்திரியா, நதால்யா வழியாக பிறந்த மகன்கள் மகள்களும் எப்போதும் கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டிய சூழலே வீட்டில் இருக்கும்.

கட்சி விவாதங்கள் அனல் பறந்து பல அடிப்படைகளில் ஒற்றுமை இருந்தாலும், நடைமுறை வேறுபாடுகளில் மன உளைச்சல் உருவாகும். தனிமனித **terror** என்ற காட்சி கூடாது. அதுவே கட்சியின் பெயரில் என்றால் கூட்டுப்பொறுப்பாகிவிடும் என்பார் டிராட்ஸ்கி.

தொழில் வளர்ச்சி **at the cost of peasantry** என்பது விவாதமாகும்போது, அது தவிர்க்கமுடியாது என்ற கொள்கை ஏற்பு இருந்தாலும் எப்படி எந்த நேரத்தில் எவ்வளவு காலத்திற்குள் என்பதில் நடைமுறை வேறுபாடுகள் எழும். ரைகோவ் அதி நிதானம் என்றால், பிரபென்ஸ்கி அனைத்தும் உடனே என்பார். காலின் பொருளாதார ஒடுக்குதல் என்பதை எப்படி செய்யவேண்டும் தெரியுமா என்பார். டிராட்ஸ்கி குலாக்குகளை அங்கு லோகல் விவசாயிகளை சுரண்டும்வரை கூட்டுப்பண்ணைகளில் நுழைய விடக்கூடாதென்பார்.

கட்சித்தோழர்கள் ஒருவருடன் மற்றவர் பேசக்கூட அஞ்சும் நிலையை நாம் உருவாக்கிவிட்டோம் என்றார் டிராட்ஸ்கி. உடன் Dzerzhinski என்கிற தோழர் யார் யாரிடம் பேச பயப்படுகிறார்களென வினவினார். நான் உங்களிடம் பயப்படவில்லை என்றார்

டிராட்ஸ்கி. ஜெர்ஜென்ஸ்கி இல்லை இல்லை நான் உங்களிடம் பேச அஞ்சுகிறேன் என்றார். நீங்கள் தோழர்களின் பலவீனத்தை பயன்படுத்துகிறீர்கள் என டிராட்ஸ்கி மீது விமர்சனம் வைத்ததைப் பார்க்கிறோம்.

1925ல் டிராட்ஸ்கி எங்கே செல்கிறோம் சோசலிசம் நோக்கியா முதலாளித்துவம் நோக்கியா என எழுதினார். டிராட்ஸ்கி சிறு பிரசுரம் எழுதவேண்டும் என்றால்கூட எழுது மேஜையில் சம்பந்தபட்ட அனைத்து materialsகளையும் திரட்டி வைத்துக்கொள்வார். முடிந்தவரை ஆதாரங்களை திரட்டுவார். பின்னர் போல்ஷ்விக் நிலைப்பாடு இப்படித்தான் இருக்கவேண்டும் என எழுதி அதற்காக போராடுவார்.

லெனினுக்கு பார்த்துவந்த சிறந்த ஜெர்மன் டாக்டர்தான் டிராட்ஸ்கியையும் பார்க்க அனுமதிக்கப்பட்டு வந்தார். டிராட்ஸ்கிக்கு வலிப்பு நோய் உண்டு. இரண்டு மணிநேரம் உரக்க பேசிவிட்டு வரும்போது கூட விழுந்துவிடுவார் என்ற செய்தி உண்டு. அவரது டாக்டர் ஜூலியஸ் சீசருக்கு உள்ள வியாதி உங்களுக்கு என்றாராம். நான் சீசர் ஆகப்போவதில்லையே அப்படி ஒரு நாளும் கனவு கூட வரவில்லையே என்றாராம் டிராட்ஸ்கி.

டிராட்ஸ்கி நேர்த்தியாக பார்ப்பதற்கு வசீகரமாக இருந்ததால் போல்ஷ்விக் கட்சி காலத்திலேயே உடன் பணியாற்றிய இரு பெண்கள் அவரிடம் நெருக்கமாக வந்தனராம். அப்போக்கை இறுதிவரை அழைத்துச் செல்லும் விருப்பமில்லாதவராக டிராட்ஸ்கி இருந்துள்ள செய்தியைப் பார்க்கமுடிகிறது.

Clare Sherdian என்ற பெண் சிலகாலம் நெருக்கமாக இருந்தபோது, டிராட்ஸ்கி தடுமாறி பின்பக்கம் சாய்ந்துவிடப்போகிறாரே என தாங்க வந்தார். நிலைமையை சமாளித்துக்கொண்ட டிராட்ஸ்கி நான் விழுந்தாலும் முன் நோக்கித்தான் விழுவேன்- பின் நோக்கி வீழேன் என்றாராம்.

வேறு பெண் லாரிசா லெய்ஸ்னர். டிராட்ஸ்கியுடம் இவர் குறித்து கதைப்புகள் இருந்தன. பேரழகியாக பார்க்கப்பட்டார் லாரிசா. கார்ல் ரடேக் லாரிசா மீது மோகம் கொண்டவர் என்ற செய்தி வம்பும் உண்டு. லாரிசா ‘மிகுந்த ஞானம் கொண்ட டிராட்ஸ்கி ’ மூலம் குழந்தை ஒன்று வேண்டும் என வற்புறுத்திகொண்டிருந்தார். ரடேக்கை அழைத்து இந்த விபரீத ஆசைகள் வேண்டாம் - அப்பெண்ணை மூடிக்கொள்ளச் சொல் என டிராட்ஸ்கி அறிவுறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டதாம்.

கொலந்தாய் போன்றவர்கள் free love எனக் குரல் கொடுத்துக்கொண்டிருந்த காலமும் கூடவே நகராமல் இல்லை.

1926ல் தன் மனைவியின் கணவன் சக தோழன் என்ற வகையில் காம்னேவ் டிராட்ஸ்கியை எச்சரித்தாராம். நீங்கள் கொலை செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். கவனம் தேவை என்றாராம். ஜீனவீவ் கேட்டாராம் **Do you think that Stalin has not discussed the question of your physical removal.**

1927ல் குடும்பத்தாருடன் டிராட்ஸ்கி சென்ற கார் மீது துப்பாக்கி சூடு நடந்தது. அனைவரும் தப்பித்தனர். நதால்யா இது அதிகாரபூர்வ ஏற்பாடுதான் என கருதினாராம்.

1927 ரஷ்ய புரட்சியின் பத்தாண்டுகள் கொண்டாட்டங்கள் துவங்கின. இந்திய விடுதலையின் நாயகர்கள் என்ற வகையில் மோதிலால் ஜவஹர்லால் மாஸ்கோ சென்றனர். நேரு அவரின் சோவியத் பயணம் பற்றி புத்தகம் ஒன்றையும் எழுதியிருந்தார். இந்த தாக்கத்தில்தான் அவர் நேராக மதராஸ் வந்து காங்கிரஸ் மாநாட்டில் சோசலிசம் பற்றி பேசியதுடன் முழுவிடுதலை தீர்மானத்தையும் எழுதினார். காந்தி அதை விமர்சித்தார் என்பதை அறிவோம்.

சோவியத்தில் அதிகார போட்டி உச்சமாக அதன் முடிவை எட்டக்கூடிய நிலையில் அப்போது இருந்தது. இந்தியாவில் நமக்கு அவை குறித்து ஏதும் தெரியாது. நேரு அவற்றை அப்போது அறிந்திருந்தாரா எனத் தெரியவில்லை.

டிராட்ஸ்கி ஜீனோவிவ் காம்னேவ் ஜஒப் போன்றவர்கள் அய்க்கிய எதிர்ப்பணி என தீவிரமாக செயல்பட்டனர். ஸ்டாலின் புகாரின் துணையுடன் பொலிட்ப்யூரோ மற்றும் மத்திய கமிட்டியை தன் கட்டுக்குள் கொணர்ந்தார். டிராட்ஸ்கி குழுவினர் இடது எதிர்ப்பாளர்களாக அறியப்பட்டால், பின்னொரு காலத்தில் வலது திரிபாளராக புகாரின் கருதப்பட்டார். எவரை எதிர்த்து யார் என காட்சி மாறிக்கொண்டிருந்தது. ஆனால் ஸ்டாலின் மய்யத்தால் 'டிராட்ஸ்கி குழு ஒழிப்பு' என்பது காட்சியின் பிரதான திசையாக இருந்தது.

அக்டோபர் புரட்சியைக் காப்பது, லெனினிசத்தைக் காப்பது என்பதை இரு சாராரும் எடுத்துக்கொண்டு முழங்கினர். அநேகமாக டிராட்ஸ்கியுடன் நின்றவர்களை பொலிட்ப்யூரோ, மத்திய கமிட்டியிலிருந்து களையெடுப்பது என்பது ஏறத்தாழ 14 வது கட்சி காங்கிரசிலேயே முடிந்துவிட்டது.

தொழிலாளர்களை தூண்டி வேலைநிறுத்தம் என இந்தக்குழுவினர் அரசாங்கத்திற்கு நெருக்கடி செய்ய முனைகிறார்கள் என்ற செய்தி மூலம் எதிர்ப்பு நடவடிக்கைகள் முடக்கப்பட்டன. டிராட்ஸ்கி பேசுகிற கூட்டங்களில் மின்சாரம் அடிக்கடி தடையானது. சோவியத் பிளஸ் எலக்ட் ரிசிட்டி என்பது சோசலிசம் என்றார் லெனின். ஸ்டாலின் சோவியத்தை ஒழித்தார். இப்போது மின்சாரத்தையுமா என கேலி செய்தார் டிராட்ஸ்கி.

இனியும் இந்த கும்பலை சகித்துக்கொள்ள முடியாது என ஸ்டாலின் மற்றும் அதிகாரத்திலிருந்தவர் முடிவெடுத்தனர். அவசியமெனில் கட்சியில் வாக்கெடுப்பு மூலமாவது இவர்களை அப்புறப்படுத்த முடிவானது. நவம்பர் 14, 1927 நாள் குறித்தனர். புரட்சியின் 10 ஆண்டு கொண்டாட்டங்களின் முதல் வாரமது. **Control commission com**

Ordzhonikidze தலைமையில் கூடி டிராட்ஸ்கி, ஜினோவீவ்,காம்னேவ் ,ஐஒப் ஆகியோரை அடிப்படை உறுப்பினரிலிருந்து வெளியேற்றுவது என முடிவெடுத்தது.

தோழர் ஐஓப் மனம் நொந்து தற்கொலை செய்துகொண்டார். அவர் குறிப்பு மறைக்கப்பட்டது. இறுதி சடங்கிற்கு போராடி டிராட்ஸ்கி அனுமதி பெற நேர்ந்தது. ஐஓப் டிராட்ஸ்கி ஒரு நாள் அதிகாரத்திற்கு வருவார் என (தவறான கற்பனையை) அதில் எழுதியிருந்தார் என டிராட்ஸ்கி தோழர்கள் பேசினர்.

டிசம்பரில் கூடிய 15வது காங்கிரஸ் இவர்கள் நீக்கத்தை உறுதிசெய்தது. புகாரினுக்கு நிதானம் வரத்துவங்கியது. தனக்கும் இது நேரலாம் என உள்குரல் பேசியதா எனத்தெரியவில்லை. போனில் டிராட்ஸ்கியை அழைத்து கொடுமை நிகழ்ந்துவிட்டதாக புகாரின் தெரிவிக்கிறார்.

டிராட்ஸ்கி தோழர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த வீடுகளை இழக்கின்றனர். தன் நண்பர் பெலோபோரோடாவ் வீட்டில் ஓர் அறையில் டிராட்ஸ்கி குடும்பம் ஒடுங்குகிறது. அடால்ப் ஐஓப் இறுதி சடங்கின் உரைதான் சோவியத் எனும் அவரது புரட்சி மண்ணில் டிராட்ஸ்கி பேசிய இறுதி உரையானது. அந்த அரசியல் இரவு தன் திரையை தொங்கவிட்டுக்கொண்டது

தீவாந்திர நாடுகடத்தல் ஆட்சி அதிகாரத்தின் தண்டனை முறைகளில் ஒன்றாக கருதப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியில் அந்தமான் நம் புரட்சியாளர்களுக்கான வதைமுகாமாக இருந்ததை அறிவோம்.

ஜார் ஆட்சியில் ரஷ்யாவில் சைபீரியா இருந்தது. லெனின், டிராட்ஸ்கி என எல்லோரும் சைபீரியாவை அனுபவிக்காமல் இல்லை. 1917 அக்டோபர் புரட்சிக்குப்பின்னர், ஆட்சி கருதிய எதிர்புரட்சியாளர்களை என்ன செய்வது. சைபீரியா மட்டுமல்ல - வேறு மனித நடமாட்டம் உலகத்தொடர்பு குறைவான இடங்களும் தீவாந்திர தண்டனைக்கான இடங்களாக இருந்தன. சுடப்படாதவர்களை எங்காவது அனுப்ப வேண்டுமே என்ற நிலை அந்த ஆட்சியிலும் இருந்தது.

டிராட்ஸ்கியை என்ன செய்வது..எங்கு அனுப்புவது ..உலகம் ஏதாவது பேசுமா என்பதெல்லாம் விவாதிக்கப்பட்டு, கட்சியிலிருந்து நீக்கப்பட்ட டிராட்ஸ்கி குடும்பத்தாருடன் தீவாந்திரம் அனுப்ப அவரிடம் இடங்கள் சொல்லப்பட்டு option கேட்கப்பட்டது.

பதவி அதிகாரத்தை 10 ஆண்டுகள் பார்த்த டிராட்ஸ்கி வழக்கம்போல் போனை எடுத்து உள்துறை சம்பந்தப்பட்டவர்களை கடுமையாக ஏசினார். அவர்கள் cool ஆக வேறு இடம் வேண்டுமானாலும் சொல்லுங்கள்..மாஸ்கோ மற்ற முக்கிய நகரங்கள் இல்லை என்றனர். ஸ்டாலின் ஆட்சி இந்த அளவு அவரிடம் சற்று பரிவாகவே நடந்துகொண்டது என்பதை இந்தச் சூழலில் காண்கிறோம்.

அல்மா அட்டா என்ற இடத்திற்கு டிராட்ஸ்கி குடும்பத்தாருடன் அனுப்பப்படுகிறார். புத்தகங்கள், செஸ்போர்ட் உடன் செல்கிறார். செல்லவேண்டிய ரயில் காத்திருக்கிறது. ஆதரவாளர்கள் ரயில்நிலையத்தில் ஆயிரக்கணக்கில் திரண்டு விடுகின்றனர். ஆட்சியாளர் அவரை வேறு ரயில் நிலையம் கொண்டு சென்று இரகசியமாக அனுப்பிவைக்கின்றனர். ஜனவரி 1928ல் இக்காட்சியைப் பார்க்கிறோம் .

அல்மா அட்டாவிற்கு மாஸ்கோவிலிருந்து 9 நாட்கள் பயணம். மகன் லேவா 20 வயதில், செர்ஜெ 18ல். லேவா அரசியலில் தந்தையுடன் முழுமையாக நின்றார். பழைய நியூஸ் பேப்பர்கள் மட்டும் தரலாம். நாள் ஒன்றுக்கு 10 கடிதப்போக்குவரத்து மட்டுமே என்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. எப்படியோ அங்கும் டிராட்ஸ்கிக்கு குழாம் உருவானது. அவர் எழுதியவை வெளிச்சென்றதால் ஆட்சிக்கு தலைவலி உருவானது.

டிராட்ஸ்கியின் ஒரு மகள் நினா திருமணமாகி மாஸ்கோவில் இருந்தார். அவர் டிபி நோயால் ஜூன் 1928ல் மறைந்தார் என்ற செய்தி வருகிறது. போய் பார்க்கக்கூட முடியவில்லை. இனியும் டிராட்ஸ்கியை சோவியத் பரப்புக்குள் வைத்திருக்க முடியாது என்ற நிலையை ஸ்டாலின் எடுத்தார்.

டிராட்ஸ்கியை அனுப்பலாமா என ஜெர்மனியிடம் கேட்கப்பட்டது. மறுத்ததால் துருக்கி முஸ்தபா கமால் அட்டாதுர்க்கிடம் கேட்டனர். அவர் இரு நிபந்தனைகளை விதித்தார். ஒன்று டிராட்ஸ்கியை துருக்கி நிலப்பரப்பில் கொல்லக்கூடாது. இரண்டு டிராட்ஸ்கி உள்ளூர் அரசியலில் தலையிடக்கூடாது. ஸ்டாலின் அரசு அந்த நிபந்தனைகளை ஏற்று, டிராட்ஸ்கி குடும்பத்தை இஸ்தான்புல் அனுப்பியது. அங்கிருந்து 30 நிமிட பயணத்தில் நல்ல ’வில்லா’ ஒன்றில் டிராட்ஸ்கி குடியேற்றப்பட்டார். ஆரம்ப செலவான 1500 அமெரிக்க டாலர்களை ஸ்டாலின் அரசு ஏற்றது. அந்த அளவிற்கு ஸ்டாலின் அரசு மனிதாபிமானம் காட்டியது- டிராட்ஸ்கியை நடத்தியது என இந்த செயல் உணர்த்துகிறது.

14

டிராட்ஸ்கி துருக்கியில் இருந்தபோது தீவிரமாக எழுத்துப்பணியில் இறங்கினார். அவரின் சுயவரலாறு **My Life An Attempt at an Autobiography** 1930ல் முடித்தார்.

1932-33ல் **History of The Russian Revolution** என்பது கொணரப்பட்டது. இரண்டுமே இலக்கியத்தரம் வாய்ந்தவையாகவும் அய்ரோப்பிய அமெரிக்க சந்தை விரும்பக்கூடியதாகவும் இருந்தன. முடிந்தவரை அவர் தன்னை முதன்மையான லெனினிஸ்ட்டாக காட்ட முனைந்தார். அக்டோபர் புரட்சியில் இருவருக்குமான தலையாய பங்கை முன் நிறுத்தினார். 1903-1916 வரை லெனினுடன் நிலவிய மாறுபாடுகளை குறைத்துக்காட்ட முனைந்தார்.

லெனின் மற்றும் ஸ்டாலின் குறித்தும் அவர் எழுதலானார். புரட்சிக்கு இழைக்கப்பட்ட துரோகம் எனும் புத்தகத்தையும் அவர் 1937ல் கொணர்ந்தார்.

1932ல் சோவியத் புரட்சியை காத்திட ஸ்டாலினுடன் சேர்ந்து வேலை செய்யத்தயார் என்று கூட அவர் தெரிவித்தார். **We have got to show that we agree to work with Stalinists for the preservation of USSR** என அவர் எழுதினார். ஆனால் ஆட்சியாளர்கள் அவரை நம்ப மறுத்தனர். டிராட்ஸ்கி தனது புகழை பங்கப்படுத்துகிறார் என்பதை உணர்ந்த ஸ்டாலின் அதற்கான தடுப்பு செயல்களில் இறங்கினார்.

பள்ளிப் புத்தகங்களில் சொல்லப்பட்டிருந்த டிராட்ஸ்கி குறித்த நல் மதிப்பீடுகள் நீக்கப்பட்டன. அவர் புரட்சியின் துரோகி, டாலர்களுக்கு விலைபோன அந்நிய ஏஜெண்ட் என்கிற சித்திரங்கள் எழுதப்பட்டன.

ஸ்டாலின் அரசியலிருந்து அப்புறப்படுத்தவேண்டியவர் என டிராஸ்கி கருதினார். ஆனால் **physical violence** அதற்கு வழியாக வேண்டாம். மக்கள் திரளின் எழுச்சி மூலம் அதை செய்யவேண்டும் என அவர் கோரினார். **Our platform counts entirely on the masses** என தன் ஆதரவாளர்களுக்கு அவர் சுட்டிக்காட்டினார்.

ஸ்டாலின் போலவே குலக்குகளை, மென்ஷ்விக்குகளை, புரட்சிகர சோசலிசவாதிகளை அக்டோபர் புரட்சிக்கு விரோதிகள் என்றே டிராட்ஸ்கியும் கருதிவந்தார். அதே நேரத்தில் ஸ்டாலின் ஆட்சியின் வெளியுறவுக்கொள்கை பாசிச அபாயத்தை கவனிக்க தவறுகிறது என விமர்சித்தார்.

டிராட்ஸ்கியின் மகன் லேவாவிற்கு ஸ்டாலின் ஆட்சி நடத்துகிற விசாரணைகள் எல்லாம் கண்துடைப்புகள்தான் என்ற எண்ணம் அவர் பாரிசில் இருக்கும்போது வலுவானது. தந்தை குறித்த கவலையும் எழுந்தது.

வெளிநாடுகளில் சோவியத் வர்த்தகம் தொடர்பான பிரதிநிதிகள் டிராட்ஸ்கியுடன் தொடர்பு என அறியப்பட்டால் அவர்கள் அழைக்கப்பட்டு மரணதண்டனை உட்பட ஒடுக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட செய்தியையும் அறிய முடிகிறது.

டிராட்ஸ்கியை டென்மார்க் மாணவர்கள் எதிர்ப்புகளையெல்லாம் மீறி உரையாற்ற அழைத்தனர். துருக்கி அனுமதி, பிரான்ஸ் வழி பயணம் என்பதால் அனுமதி பெற்று நவம்பர் 1932ல் உரையாற்ற நதால்யாவுடன் டிராட்ஸ்கி சென்றார். வெகு ஆண்டுகளுக்கு பின்னர் பொதுமேடை ஒன்றில் அதுவும் இளம் மாணவர்கள் மத்தியில் என்பதே அவருக்கு உற்சாகம் தந்தது. பயணக்களைப்பை மீறி அவர் அந்த உரையை நல்கினார்.

ஸ்டாலினின் விரும்புகிற ஒரு நாட்டில் தனித்து சோசலிசம் என்பது கனவாகவே முடியும் என டிராட்ஸ்கி விமர்சித்தார். தான் பல ஆண்டுகளாக சொல்லிவரும் நிரந்தர புரட்சி எனும் வாதம் சரியானதே எனப் பேசினார்.

1933ல் அவர் பிரான்சில் இருக்கும்போது பிரஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி அவரை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தது. மார்செய்ல்ஸ் அருகில் டிராட்ஸ்கிய நண்பர்களால் அவர் போஷிக்கப்பட்டார். 1935 களில் டிராட்ஸ்கி, நதால்யா இருவருமே உடல்நிலை பாதிக்கப்பட்டனர். நீ நன்றாகிவிட்டால், உலகில் எனக்கு வேறு எதுவும் தேவையில்லை என நதால்யா மிகுந்த ‘எமோஷனலாக ’ இருந்தார் என டிராட்ஸ்கி இந்தக் காலத்தை குறிப்பிடுகிறார்..

டிராட்ஸ்கியின் 1935 டைரி குறிப்பு இப்படி எழுதப்பட்டுள்ளது. லெனின் மட்டும் பெட் ரோகிராட் வராமல், நானும் அவரும் உறுதியாக நிற்காமல் போய் இருந்தால் அக்டோபர் புரட்சி நடந்திருக்குமா என்று சொல்லமுடியாது. மே1917லிருந்து நான் மட்டும் பிற பொலிட்ப்யூரோ உறுப்பினர்களுடன் மோதி தோற்றுக்கூட போயிருப்பேன். அவர்கள் கூடவே கூடாது என்ற நிலையில் இருந்தனர். லெனின் உறுதி புரட்சியைக் கொணர்ந்தது.

டிராட்ஸ்கி வரலாற்றை எழுதிய ராபர்ட் சர்வீஸ் இதை மிகச்சரியான மதிப்பீடு என்கிறார்.

துருக்கி, பிரான்ஸ், நார்வே என டிராட்ஸ்கி குடும்பம் அடைக்கலம் தேடி நகர்ந்துகொண்டிருந்தது. எந்த நாட்டில் தங்கள் மீதிக் காலம் என்பதில் நிச்சயமின்மை நிலவியது. மகன் லேவா பிரான்சில் தொடர்ந்து வசித்துக்கொண்டு டிராட்ஸ்கி எழுதக்கூடியவற்றை நண்பர்கள் மூலம் ’புல்லட்டின்’ எனும் இதழ் வாயிலாக கொணர்ந்தார்.

டிராட்ஸ்கி நார்வேயில் இருந்தபோதுதான் ஸ்டாலின் ஆட்சி அவருக்கு ஆகஸ்ட் 24, 1936ல் மரணதண்டனை **in-absentia** விதித்தது. நார்வே அரசு செய்வதறியாது செப்டம்பரில் அவரை வீட்டுக்காவலில் வைத்தது. வெளித்தொடர்புகள் முற்றிலுமாக தடைசெய்யப்பட்டது.

உண்மையிலேயே நதால்யா தன் கணவருக்கு நார்வேயில் சற்று கூடுதல் பாதுகாப்பு இருப்பதாக நினைத்தார். அவர் கடுமையாக சோர்வுற்றார். சாய்வு நாற்காலியில் படிப்பதைத்தவிர வேறு வேலைகள் ஏதும் செய்யமுடியா சூழலில் டிராட்ஸ்கி மனம் நொந்து போனார்.

தனது வக்கீல்கள் மூலம் லீக் ஆப் நேஷன்ஸ்க்கு அப்பீல் செய்தார். தன் மீதான சோவியத் குற்றசாட்டுகளுக்கு ஆதாரமில்லை. அபாண்டமானவை என்றார். புல்லட்டின் வழியே தன் வாதங்களை உலகறிய செய்ய முயற்சித்தார். நார்வேயிலிருந்து வெளியேறினால்,அடுத்து எங்கே என்ற கேள்வி துளைத்தது.

அமெரிக்காவின் ஆசி கிட்டவில்லை. மெக்சிகோ இடதுசாரிகளுக்கு அடைக்கலம் என்பதில் சற்று இதமாக நடந்துகொண்டிருந்தது. புகழ்வாய்ந்த ஓவியர் டீகோ ரிவெரா மெக்சிகன் அதிபருக்கு விடாமல் பெட்டிஷன் போட்டுக்கொண்டிருந்தார். டிராட்ஸ்கிக்கு அடைக்கலம் அவசியம் என்பதை வற்புறுத்தினார். டிராட்ஸ்கிய நண்பர்கள் மெக்சிகோ ஏன் என்றனர். மாக்ஸ்சாஷ்மேன் ஒரு பைசாவிற்கு அங்கு பிரயோசனம் இல்லை என

கருத்தறிவித்தார். ஆனால் அமெரிக்க அரசாங்கம் காதுகொடுக்கா நிலையில் மெக்சிகோதான் என்ற நிலை உருவானது.

நதால்யாவும் டிராட்ஸ்கியும் நார்வேயிலிருந்து மெக்சிகோ நாட்டிற்கு டிசம்பர் 20, 1936ல் பயணம் கிளம்பினர். இன்னும் சில ஆண்டுகளில் தனக்கான இறுதி நாள் அங்கு அமையும் என டிராட்ஸ்கி அன்று எண்ணியிருக்கமாட்டார். 20 நாட்கள் தனித்த பயணம் . பயணத்தில் **The Crimes of Stalin** என்கிற புத்தகத்தை டிராட்ஸ்கி எழுதலானார்.

டாம்பிகோ எனும் எண்ணெய் நகர் ஒன்றில் அவரது கப்பல் ஜனவரி 9 1937ல் அவரை இறக்கிவிட்டது. ஓவியர் டீகோ உடல்நிலை பாதிக்கப்பட்டு அழைக்க வரவில்லை. அவர் துணைவியார் பிரைடா வந்திருந்தார். புகழ்வாய்ந்த டிராட்ஸ்கிய அறிஞர்கள் ஜார்ஜ் நோவாக், மாக்ஸ் சாஷ்மேன் வந்திருந்தனர்.

மெக்சிகோவின் தகவல்தொடர்பு அமைச்சர் பிரான்சிஸ்கோ என்பார் நல்ல ஏற்பாடுகளை செய்து மெக்சிகோ சிட்டி செல்ல உதவினார். அங்கிருந்து மேற்கு பகுதியில் கோயோகான் என்ற இடத்தில் பிரைடா அருமையான தன் Blue House யை டிராட்ஸ்கி தங்கிட கொடுத்தார். காற்றோட்ட அறைகளுடன் கிளிகள் கொஞ்சும் அருமையான சூழலுடன் அவ்வீடு இருந்தது. மேம்பட்ட உணவு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. டிராட்ஸ்கி தன் கூடுதல் செலவிற்கு தன் எழுத்தை நம்பி வாழத்துவங்கினார்..

அழகான நீல வீடு மெக்சிகோவில் வாழ்விடமாக டிராட்ஸ்கி நதால்யாவிற்கு இருந்தது. வீட்டை தந்த பெண்மணி திருமதி பிரைடா ஓவியர் டீகோ ரிவேராவின் துணைவியார். பிரைடாவும் ஓவியர்தான். அழகான பெண்ணும் கூட. டிராட்ஸ்கியின் புத்திக்கூர்மையால் இவரும் கவரப்பட்டார்.

நான்காவது அகிலத்தை கட்டுவதில் டிராட்ஸ்கி தனது கவனத்தை எடுத்துக்கொண்டார். 1938ல் பிரான்சில் தனது ஆதரவாளர்கள் சிலருடன் அந்த புதிய அகிலத்தை அமைத்தார். 12 நாடுகளிலிருந்து ஸ்டாலின் ஆதரவு கம்யூனிஸ்ட் கட்சிகளிலிருந்து ஆங்காங்கே மாறுபட்டவர்கள் இதற்கு துணையாக இருந்தனர். ஆரம்பத்தில் உலக முழுதும் சில ஆயிரம் பேர்கள்தான் தங்களை டிராட்ஸ்கியர்கள் எனச் சொல்லி முன்வந்தனர்.

பிரான்சில் புல்லட்டின் பணிகளை பார்த்து வந்த டிராட்ஸ்கியுன் மகன் சுகவீனமிற்று அருகாமை மருத்துவமனையில் இறந்தார். அவர் தவறான சிகிட்சையால் கொல்லப்பட்டிருக்கலாம் என டிராட்ஸ்கியர்கள் கருதினர். எவராலும் ஆதாரம் எதையும் வெளியிட முடிந்ததாக தெரியவில்லை.

லேவாவிற்கும் தந்தையின் செயல்களில் அதிருப்தி கூடிக்கொண்டே வந்தது. தானே சரி என்ற போக்கில் தோழர்களை இழப்பது அவரின் மோசமான குணம் என பகிரங்கமாக விமர்சிக்க ஆரம்பித்தார் லேவா. டிராட்ஸ்கியிடம் எவராவது உங்கள் மகன் என பேச ஆரம்பித்தால், அவருக்கு பெயர் இல்லையா என்ன என் மகன் என எரிந்து விழுவார் டிராட்ஸ்கி. வேறுபாடுகள் இருந்தாலும் மகனின் துயரம் டிராட்ஸ்கி குடும்பத்தை பாதித்தது.

சோவியத் கட்சியிலிருந்து டிராட்ஸ்கி வெளியேற்றப்பட்டவுடன், அவரின் இரத்த உறவு கொண்ட யூதர்கள், அவர்களை மணந்தவர்கள் என ஸ்டாலின் அரசாங்கம் தேடிப்பிடித்து வேட்டையாடியது. மரணதண்டனை கூட நேர்ந்தது என ராபர்ட் சர்வீஸ் பெயர்களை குறிப்பிட்டு சொல்கிறார்.

மெக்சிகோ நீல வீட்டில் அதன் உரிமைக்காரர் ஓவியர் பிரைடாவுடன் டிராட்ஸ்கிக்கு காதல் உறவு ஏற்பட்டது. சில மாதங்கள் அவர்கள் நெருக்கமாக இருந்தனர். அறிந்த தோழர் ஒருவர் ஸ்டாலினுக்கு தெரிய வந்தால் ஆபத்தாக முடியும். மேலும் நான்காவது அகில செயல்பாட்டிற்கும் கேடாகும் என அறிவுறுத்தியதாக அறிகிறோம். அங்கு அப்படி டிராட்ஸ்கி மனசாட்சியென தோழர் இருந்திருக்கவேண்டும்.

நதால்யாவும் இந்த உறவை அறிந்து நீல வீட்டிலிருந்து சற்று தள்ளி குடியேற முயற்சிகள் எடுத்தார். ஓவியர் டீகோ ரிவேரா அகிலத்தில் தனக்கு முக்கியத்துவத்தை எதிர்பார்த்தார். பிரைடா டிராட்ஸ்கி உறவு அவருக்கு தெரியுமா என புரிந்துகொள்ளமுடியவில்லை. ஆனால் டிராட்ஸ்கி மீதான அன்பால் புளூ ஹவுஸ் விட்டு போகவேண்டாமே - அது பிரைடா வீடு , அவளிடம் தெரிவிக்கவும் என வேண்டிக்கொண்டார் டீகோ.

அலெக்சாந்திரியாவை கைக்குழந்தையுடன் அப்படியே சைபீரியாவில் விட்டுத்தான் அடுத்த வாழ்வை நதால்யாவுடன் டிராட்ஸ்கி மேற்கொண்டார். முன்பே இரு பெண்மணிகள் அவருடன் இணைத்து பேசப்பட்டனர். இப்போது பிரைடாவும் பேசப்பட்டார். ஆனால் நதால்யாதான் அவருடன் வாழ்நாட்கள் முழுவதும் வாழ்ந்த பெருமாட்டி. 30 ஆண்டுகளுக்கு மேலாக இணைந்து வாழ்ந்தவர். இருவரும் அதிகாரபூர்வமாக திருமணம் செய்துகொள்ளவில்லை. அவரின் ஆத்ம தோழி நதால்யாதான். இன்பதுன்பங்களில் முழுமையாக நின்றவர் அவர்தான்.

பிரைடா விலகிக்கொண்ட பின்னர் ஸ்டாலினிஸ்ட்களுடன் அரசியல் ரீதியாக அவர் நெருக்கமானார். ஸ்டாலினின் அற்புத ஓவியம் ஒன்றையும் அவர் வரைந்தவரானார்.

டிராட்ஸ்கி எப்போதும் தான் கொல்லப்பட வாய்ப்புண்டு என்ற அச்சத்துடன் மெக்சிகோவில் வாழ்ந்துகொண்டிருந்தார். பெரும்பாலும் பேட்டிகளை மதிய நேரத்தில்தான் வைத்துக்கொள்வார். செலவிற்கு எழுத்துப்பணியையே நம்பினார். ஸ்டாலின் மீது விமர்சனம் செய்பவர் என்ற வகையில் ஏராள அமெரிக்க ரிபோர்ட்டர்கள் அவரிடம் வந்தனர். சில நேரம் பேட்டி என்றால் 1000 டாலர்கள் தரவேண்டும் என டிராட்ஸ்கி கோரிய செய்தியைப் பார்க்கிறோம். அவரின் புத்தகங்களுக்கு ஆரம்பத்தில் இருந்த வரவேற்பு மெதுவாக குறையத் துவங்கியது.

வாழ்வின் போராட்டம் இன்னும் வதைகளிலிருந்து அவரை மீட்கவில்லை. நிச்சயமற்ற வாழ்வு என்கிற நிலை நீடித்துக்கொண்டிருந்தது….

இரண்டாவது உலகப்போர் துவங்கிய நேரத்தில் ஹிட்லர் ஜெர்மனியுடன் ஸ்டாலின் சோவியத் செய்திருந்த **non aggression pact** இருந்தது.

சோவியத்தை காப்பது என்ற அடிப்படை அம்சத்தில் டிராட்ஸ்கி வேறுபடவில்லை. தன் ஆட்சியை அதன் மூலம் 'சோவியத்தை' காப்பது என்பதற்காக ஹிட்லருடன் எந்த அளவு வேண்டுமானாலும் ஸ்டாலின் சமாதானம் செய்துகொள்கிறார் என்பதுதான் டிராட்ஸ்கியின் 1939 செப்டம்பர் கால விமர்சனமாக இருந்தது.

கிழக்கு போலந்து தாக்குதலை ஹிட்லர் செய்தார். ஸ்டாலின் ஆட்சி தலையிடாது என்ற உறுதிமொழி இருந்தது. எஸ்டோனியா,லாத்வியா,லிதுவேனியா ஆகிய மூன்று ஆட்சி அரசாங்கங்களையும் உடனடியாக **incorporation with USSR** என ஸ்டாலின் ஆட்சி அறிவுறுத்தி ஆணையிட்டது. அப்பகுதிகள் **Sovietisation** என்பதற்கு உள்ளாக்கப்பட்டன.

பின்லாந்த் ஸ்டாலின் அறிவுறுத்தலை ஏற்கமறுத்து போராடியது. டிராட்ஸ்கி கூட பின்லாந்த் சோவியத் மயமாதல் அம்மக்களுக்கு நல்லதே எனக் கருதினார். கோமிண்டர்ன் சார்ந்த ஆட்டோ குசினன் அரசை பின்லாந்தில் அமர்த்தினர். ஆனால் அமெரிக்க டிராட்ஸ்கியர்கள் இதை விமர்சித்தனர். ஸ்டாலினோ இம்பீரியலிசம் என குற்றம் சாட்டினர்.

பொதுவாக டிராட்ஸ்கி தான் நினைப்பதையே சரி என வாதாடிவருகிறார் என அவரது நெருங்கிய சகாக்களே எண்ணலாயினர். சோவியத் விரிவாக்க நடவடிக்கைகளுக்கு இரகசிய ஆதரவை டிராட்ஸ்கி தந்துகொண்டிருக்கிறாரா என்ற எண்ணம் வரத்துவங்கியது. சாஷ்மேன் போன்றவர்களை சமாதானப்படுத்த தான் அமெரிக்கா வரத்தயார் என டிராட்ஸ்கி சொல்லவேண்டியதானது.

இரண்டாவது உலகப்போருக்கு முன்பு பாலஸ்தீனிலிருந்து தனியாக யூதர்கள் நாடு என்பதை டிராட்ஸ்கி ஏற்காமல் இருந்தார். சோசலிச புரட்சி மூலம்தான் அவர்கள் வாழும் நாடுகளில் பாதுகாப்பு என்ற பொது அம்சத்தையே பேசிவந்தார்.

ஹிட்லரின் வதைகளை அறிந்தபின்னர் **Jews Stake** எனப்பேசவேண்டியிருந்தது. நியூயார்க் டிராட்ஸ்கியர்களுக்கு இனியும் அரசியல் கேள்விகளுக்கு டிராட்ஸ்கியை நம்ப முடியுமா என்ற எண்ணம் உருவானது.

சோவியத் மீதான பேரன்பு, ஸ்டாலின் மீது அவர் பார்த்த குறைகளை மீறி அவரை துரத்தியது. சோவியத் தொழிலாளர்களிடத்தும் விவசாயிகளிடத்தும், ஜவான்களிடத்தும்

மெக்சிகோவிலிருந்து வேண்டுகோள் விடுத்தார். தாய்மண்ணை காப்பாற்றுவீர் என்பதாக அவ்வேண்டுகோள் அமைந்தது.

ஆனால் துரதிருஷ்டமாக அவரது செய்தி எவ்விடத்திற்கும் போகாமல் ஆட்சியாளர்களால் பார்த்துக்கொள்ளப்பட்டது. மெக்சிகோவில் புளு ஹவுசிலிருந்து வெளியேறி அவெனிதா வியன்னா எனும் பகுதியில் டிராட்ஸ்கி வாழத்துவங்கினார். அவருடைய தோழர்கள் உயிருக்கு பெரும் ஆபத்து என்பதை எச்சரித்து வந்தனர்.

மெக்சிகோ போலீஸ், அமெரிக்க தூதரகம், கிரெம்ளின் ஒற்றர்கள் என பலராலும் அவர் தீவிரமாக கண்காணிக்கப்பட்டார். டிராட்ஸ்கி என்ற பெயரில் கடிதங்களை எழுதாமல் **old man, uncle, Vidal, oaken, crux** என பல புனைப்பெயர்களில் கையெழுத்திட்டார்.

அவருக்கு 60 வயது முடிந்த நிலை. டாக்டர் சொலிங்கர் என்பார் டிராட்ஸ்கிக்கு மெடிக்கல் செக் அப் செய்தவுடன் பிப் 27 1940ல் அவர் testament எழுதலானார். நதால்யா டாக்டரை கடுமையாக கோபித்துக்கொண்டார். உயில் எழுதும் நிலைக்கு அவர் மனநிலை போன வருத்தம் நதால்யாவிற்கு.

எனது புரட்சிகர வாழ்வில் துளி கறை கூட இல்லாமல் இருக்கவே விழைகிறேன். பாட்டாளிவர்க்க புரட்சியாளனாக, மார்க்சிஸ்ட்டாக, இயக்கவியல் பொருள்முதல்வாதியாக, பழுத்த நாத்திகனாகவே சாவேன். இளமையில் இருந்ததைவிட மனிதகுலத்திற்கு உகந்த எதிர்காலம் கம்யூனிசமே என்கிற உறுதிப்பாடு எனக்கு வயதான பின் அதிகமாகியுள்ளது என டிராட்ஸ்கி எழுதினார்.

மரணம் நெருங்குவதை அவர் உணர்ந்தார். கொல்லப்படலாம் என்ற உள்ளுணர்வும் இருந்தது. ஆனால் தன் மரணம் கொலையாக மட்டுமே அமையும் என்கிற நம்பிக்கையில்லாமல் போனது. 1940 மே 24 விடியற்காலை அவரது வில்லா குடியிருப்பில் 20 ஆயுதம் தாங்கியவர்களால் துப்பாக்கி சூடு நடந்தது. கட்டில் அடியில் பதுங்கியும், ஒவ்வொரு அறையாக ஊர்ந்து நகர்ந்தும் டிராட்ஸ்கி நதால்யா உயிர் தப்பினர்.

உதவியாளராக இருந்த பாப் ஹர்த் மீது சந்தேகம் எழுந்தது. அவர் செக்யூரிட்டி பணியில் ரொம்ப காஷுவலாக இருக்கிறார் என நதால்யா சொல்லிவந்தார். தாக்குதல்காரர்கள் அவரை தூக்கி சென்று கொலை செய்த தகவலும் கிடைக்கிறது.

மெதுவாக அந்நிகழ்விலிருந்து மீண்ட டிராட்ஸ்கி ஸ்டாலின் குறித்த புத்தகம் எழுதலானார். ஆனாலும் அவரின் உயிர்க்கான போராட்டம் தொடர்ந்தது. அது உதவியாளர் ஜாக்சன் வடிவில் வந்தது.

ஜாக்சனை நம்பவேண்டாம் என தோழர்கள் சொல்லினர். அவன் உண்மையை பேசுவதில்லை என்றனர். நல்ல வெயிலில் ஏன் மழைகோட் என நதால்யா கேட்டதற்கு எப்போ மழைவரும் என தெரியுமா என ஜாக்சன் சொன்ன பதிலை நதால்யா தெரிவித்தார்.

ஜாக்சன் நேரம் பார்த்து டிராட்ஸ்கியை தாக்க விரும்பினார். களைகொத்து/ சுத்தியல் ஜாக்சன் கோட்டுக்குள் எப்போதும் மறைந்து இருந்தது. டிராட்ஸ்கி தான் எழுதிய பக்கங்களில் தலை கவிழ்ந்து இருந்தார். மண்டையில் ஒரே போடு. டிராட்ஸ்கி சுருண்டார். மருத்துவமனையில் ஆகஸ்ட் 21 1940ல் அவர் மரணத்துடன் போராடுகிறார் என்ற செய்தி உலகெங்கும் பரவியது. அமெரிக்க வானொலி ஆகஸ்ட் 21ல் மறைந்தார் என்ற செய்தியை வெளியிட்டது. ஜாக்சன் பெயர் ரமான் மெர்கடர் என விசாரணையில் தெரியவந்தது.

டிராட்ஸ்கியின் பலம் பலவீனம் சாதனைகள் எழுத்தாற்றல் குறித்து பத்திரிகைகள் எழுதின.

புரட்சியின் துரோகி, அந்நிய ஏஜெண்ட், சோவியத் எதிர்த்த சதிகாரன் என பிராவ்தா எழுதிக்கொண்டது. அந்த எடிட்டோரியல் ஸ்டாலினால் சரிபார்க்கப்பட்டு வெளியிடப்பட்டது.

டிராட்ஸ்கியை முடிந்தவரை நான்காவது அகிலத்தினர் எடுத்துக் கொண்டாடினர் . பின்னரும் 20 ஆண்டுகள் நதால்யா வாழ்ந்து டிராட்ஸ்கியவாதிகளை உற்சாகப்படுத்தி வந்தார். சோவியத் வரலாறு பேசும்போது பேசவேண்டியவர்களுள் ஒருவராக டிராட்ஸ்கியும் இருக்கிறார்….









ஆசிரியரின் பிற நூல்கள்

1. மார்க்சியத் தடங்கள்

2. ரோசாலக்ஸம்பர்க்

3. போராளிகளின் குரல்

4. பகவத்கீதை பன்முகக் குரல்கள்

5. Trade Justice in Telecom

6. Selected Ideas of O.P Gupta

7. ஹெகல் துவங்கி..

8. கார்க்கியின் அரசியல்வெளி

9. நவீன சிந்தனையின் இந்தியப் பன்முகங்கள்

10. காந்தியைக் கண்டுணர்தல்

11. நேருவின் மரபு

12. பெரியாரின் பொதுவுடைமை புரிதல்

13. அம்பேத்கரும் கம்யூனிசமும்

14. தோழர் காந்தி மகாத்மாவின் சோசலிச உரையாடல்

15. பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் (என் எளிய வாசிப்பில்)

16. லெனின் நான்கு கட்டுரைகள்

17. என் வாசிப்பில்…

சிறு வெளியீடுகள்

1. ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா

2. சிகாகோ மேதின தியாகிகள்

3. பகுனின் போராட்ட வாழ்வும் அனார்க்கிசமும்

4. விடுதலைக்கு முன்னர் எம் என் ராய்

5. பிரடரிக் எங்கெல்ஸ் நட்பின் சிகரம்

6. நேதாஜி சுபாஷ் – கம்யூனிஸ்ட்கள் உறவும் உரசலும்

7. காந்தியும் கம்யூனிசமும்

8. வட்டமேஜை மாநாட்டில் அம்பேத்கர்

9. வரலாற்றில் சௌரி சௌரா (நூற்றாண்டின் நினைவாக)

www.pattabiwrites.in